BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# தமிழகத்தில் குறும்பர் பழங்குடியின மக்களின் வாழிடச் சுழல் மற்றும் சமூகநிலை - ஓர்ஆய்வு

# A Study on the Habitat and Social Status of the Kurumba Tribes in Tamil Nadu

**தீபிகா. ஆ,**

முனைவர்பட்ட ஆய்வாளர்(பதிவுஎண்:20PHTMF008), தமிழ்த்துறை,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்- 641043

**முனைவர். பிரியதர்ஷினி. ச**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர். 641043

**Author: Deepika A.**

Ph.D. Research Scholar (Reg. No: 20PHTMF008), Department of Tamil,

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore - 641043, Tamil Nadu, India.

deepicnr1310@gmail.com. Ph - 9025836551. ORCID : https://orcid.org/0000-0003-0444-7996

**Supervisor / Co-Author: Dr. Priyadharshini S**

Assistant Professor, Department of Tamil,

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore - 641043, Tamil Nadu, India.

E.mail.: deepicnr1310@gmail.com Cell : 9025836551 ORCID: https://orcid.org/0000-0003-1740-8793

**Abstract**

This article explores the living environment and social structure of the Kurumbas, one of the most ancient indigenous tribes of Tamil Nadu. It presents records of the Kurumbas ranging from Sangam literature to modern-day ethnographic studies. The article explains, with supporting data, the unique languages, clan systems, marriage customs, and professional lifestyles of their sub-sects—Mullu Kurumba, Betta Kurumba, Jenu Kurumba (Thenu Kurumba), and Palu Kurumba—who reside in regions including the Nilgiris and Coimbatore.

**Key words**: Mullu Kurumba, Betta Kurumba, Thenu Kurumba, Palu Kurumba, Nilgiris, koodalore

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை தமிழகத்தின் மிகத் தொன்மையான பழங்குடியின மக்களுள் ஒருவரான 'குறும்பர்' இன மக்களின் வாழிடச் சூழல் மற்றும் அவர்களின் சமூகக் கட்டமைப்பை ஆராய்கிறது. சங்க இலக்கியங்கள் முதல் நவீனகால இனவரைவியல் ஆய்வுகள் வரை குறும்பர்கள் குறித்த பதிவுகளை இக்கட்டுரை முன் வைக்கிறது. நீலகிரி, கோயம்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் இவர்களின் உட்பிரிவுகளான முள்ளுக் குறும்பர், பெட்டக் குறும்பர், தேனுக் குறும்பர் மற்றும் பாலுக் குறும்பர் ஆகியோரின் தனித்துவமான மொழி, குலப் பிரிவுகள், திருமண முறைகள் மற்றும் தொழில்சார் வாழ்வியல் முறைகளைத் தரவுகளுடன் இக்கட்டுரை விளக்குகிறது.

**ஆய்வுச் சுருக்கம்:** முள்ளுக்குறும்பர், பெட்டக்குறும்பர், தேனுக்குறும்பர், பாலுக்குறும்பர், நீலகிரி , கூடலூர்

## முன்னுரை

"மண்ணின் மைந்தர்கள்" என்று அழைக்கப்படும் பழங்குடியின மக்கள், ஒரு நிலப்பகுதியின் ஆதி அடையாளத்தைத் தாங்கி நிற்பவர்கள். அந்த வகையில், தமிழகத்தின் மலைசார்ந்த பகுதிகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் வாழ்ந்து வரும் குறும்பர் இன மக்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள். சங்க இலக்கியங்களில் 'குறுநில மன்னர்களாகவும்', 'போர் வீரர்களாகவும்' போற்றப்பட்ட இவர்கள், கால மாற்றத்தினால் இன்று தங்களின் தனித்துவமான வாழ்வியல் அடையாளங்களுடன் மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தின் நிலவியல் அமைப்பிற்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டுள்ள குறும்பர்களின் உட்பிரிவுகள், அவர்களின் மொழிப் பயன்பாடு மற்றும் சமூக உறவு முறைகளை ஆய்வுக்கு உட்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். இக்கட்டுரை குறும்பர்களின் வரலாற்றுப் பின்னணியையும், அவர்களின் தற்போதைய சமூக நிலையையும் ஆய்வு நோக்கில் விவரிக்கிறது

**குறும்பர்**

குறும்பர் பழங்குடியின மக்கள் கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி, திருச்சி மாவட்டங்களில் வாழ்ந்துவருகின்றனர். "குறும்பர்கள் தொடக்க காலங்களில் குறுநில மன்னர்களாக வாழ்ந்துள்ளனர்; குரும்பர்களை குறுநில மன்னர்; துர்சணர், ஒரு பழமையான பாரதியார், வேடர், மேய்போர் சாதியில் முரட்டுக் கம்பளி நெய்யும் ஒரு பிரிவினர்" (அபிதான சிந்தாமணி தமிழ்க்கலைக் களஞ்சியம், ப.215) என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.

குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தில் தங்கள் தொன்மையும் தொடர்ச்சியும் மாறாமல் வாழ்ந்து வருகின்றனர். "நீலகிரிவாழ் பழங்குடிகளிடம் காலாகியவற்றிலும் ஆட்டிடையர்களான இவர்களின் இனப்பெயரைப் பெற்றவர்களோடு எத்தகைய தொடர்பும் உடையவர்களாக தெரியவில்லை"(தமிழகத் தொல்குடிகள், ப.103). நீலகிரிவாழ் குறும்பர்கள் கால்நடைமேய்க்கும் குறும்பர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் என்பதை தெளிவுப்படுத்துகிறார். நீலகிரி மாவட்டத்தின் தாழ்வான பகுதிகளான கூடலூர், குன்னூர்; கோத்தகிரி ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் வாழும் குறும்பர்கள் நான்கு பிரிவுகளாக உள்ளனர். குறும்பர்,

- முள்ளுக் குறும்பர்
- பெட்டக் குறும்பர்
- தேனுக் குறும்பர்
- பாலுக் குறும்பர்

முள்ளுக் குறும்பர், பெட்டக் குறும்பர், தேனுக் குறும்பர் ஆகிய மூன்று பிரிவினர் நீலகிரி மாவட்டத்தின் கூடலூர் பகுதியிலும், பாலுக் குறும்பர் கோத்தகிரி பகுதியிலும் வாழ்கின்றனர். "இதுவரை இனங் கண்டறியப்பட்டுள்ள மொழியியல்சார் இனக்குழுப் பண்பாட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் பெட்டக் குறும்பர், ஊராளிக் குறும்பர், ஜேனுக் குறும்பர், காட்டு நாயக்கர், முள்ளுக் குறும்பர், குறு மன்ஸ், ஆலு குறும்பர் பால் குறும்பர் எனும் இந்நான்கும் குறுமர் பழங்குடியினரது உள் பிரிவுகள் அல்ல என்றும் இவை ஒவ்வொன்றும் தனித்தனி இனக்குழுத் தகுதிப் பாட்டிற்கு உரியன என்று உறுதியாக கருத்துக் கொண்டுள்ளார்".(நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு, ப.21). சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் குறும்பர்களை குறுநில மன்னர்களாக, வீரர்களாக, கால்நடை மேற்பவர்களாக போர் தொழில் செய்வாராக பதிவு செய்துள்ளன.

*"அருங்குறும்புஎறிந்தஆற்றலோடு(அகநானூறு, பா.342)*

என்னும் அகநானூறும்,

*"வில்லைஉடையவீடுகள்நிறைந்தகுறும்பு"*

*(பெரும்பாணாற்றுப்படை, பா.121-124)*

என்று பெரும்பாணாற்றுப் படையும் பதிவு செய்கின்றன. மற்றும் ஓர் அகப்பாடலில்,

*"ஓம்பினார் சீவக சிந்தாமணி கவர்ந்து கூழ்கெழு குறும்பில"*

*(அகநானூறு பா.113)*

என்றும் குறிப்பிடுகிறது

*"கல்லுடைக்குறும்பின்வயவர்வீழ்இய"*

*(அகநானூறு பா.113)*

என்று அகநானூறு குறும்பர்களை பற்றிக் குறிப்பிடுகிறது.

குணமாலையர் இலம்பகத்தில்,

*"கேண்பரு குறும்பர், வெம்போர் குறும்பர்"*

*(சீவகசிந்தாமணி பா.855)*

என்று குரும்பர்களைப் பற்றி கூறுகின்றது.

**வாழிடங்கள்**

| மாவட்டம் | தாலுகா | பாடியின் பெயர் | புழங்குடி பிரிவு |
|---|---|---|---|
| நீலகிரி | கூடலூர் | நெடுங்கோடு, கப்பாலா, காப்புக்குன்று, நரிவளப்பு, தெய்யக்குன்னி, ஒனிமூலா, படச்சேரி, மாடக்குண்டு, கள்ளிச்சாலு, கொன்னாடு. | முள்ளுக் குறும்பர் |
| நீலகிரி | கூடலூர் | குன்னூர் ஆனக்கெட்டி, தெப்பக்காடு, முட்டலுமூலா, அய்யங்கொல்லி, மசனக்குடி, பந்தலூர், பர்லியாறு, மரப்பாலம் | தேனுக் குறும்பர் |
| நீலகிரி | கூடலூர் | யானைப்பாடி, தேக்குப்பாடி, லைட்பாடி, சுண்டவயல், மாதேஸ்வரன் கோவில், புளியம்பாறை, தேவரி சோலை, மசனக்குடி, முதுமலை, பந்திப்பூர், தெப்பக்காடு, | பெட்டக் குறும்பர் |
| நீலகிரி | கோத்தகிரி | மாங்குடிசோலை, குஞ்சப்பனை, கொடநாடு, ஈலாடா, செங்கல் கோம்பை, | பாலுக் குறும்பர். |

**மொழி**

பெரும்பான்மையான குரும்பர்கள் வாழும் கூடலூர் பகுதியானது தமிழ், மலையாளம் கன்னடம் ஆகிய மூன்று மாநில எல்லையாகும். ஆதலால் தங்கள் கிளை மொழியுடன் சேர்த்து மேலும் மூன்று மொழிகளை பேச வேண்டியுள்ளது.

. "குறும்பன் என்பது தெலுங்கு அல்லது கன்னட மொழியின் குறுபா என்னும் சொல்லின் தமிழ் வடிவம், இரண்டு பெயர்களுக்கு இடையிலும் கூறும் குழப்பங்கள் நிலவி வருகின்றன. ஆனால் குறுபர் என்பவர்கள் தெலுங்கு அல்லது கன்னட மொழி பேசுகின்றனர். குறும்பர்கள் தமிழ் பேசுகின்றனர். அவர்களுக்கும் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் வாழ்கிறவர்கள் குறும்ப மொழியையும், சம நிலத்தில் வாழ்கிறவர்கள் கன்னட மொழியையும் பேசுகின்றனர்." (மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடிகள், ப.176) என்று ம. இராசேந்திரன் குறிப்பிடுகிறார்.

தேனுக்குறும்பர்கள்பேசும்மொழிகன்னடத்தின்கிளை மொழியாககருதப்படுகிறது. பெட்டக் குறும்பர்கள் பேசும் மொழி திராவிட மொழிக் குடும்பத்தில் தனித்த மொழியாகக் கருதப்படுகிறது. கோத்தகிரிவாழ் குறும்பர்கள் கன்னடம் கலந்த தமிழ் மொழியைப் பேசுகின்றனர்.

**முள்ளுக் குறும்பர்கள்**

முள்ளுக் குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தின் கூடலூர் பகுதியிலும், கேரள மாநிலத்தின் வயநாடு பகுதியிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு மாநிலங்களிலும் வாழும் முள்ளுக் குறும்பர்கள் எவ்வித வேறுபாடுகளுமின்றி, நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இவர்கள் வேளாண்மை மற்றும் வேட்டை ஆகிய தொழில்களைச் செய்கின்றனர்.

**குல அமைப்பு**

முள்ளுக் குறும்பர்களிடையே நான்கு குல பிரிவுகள் உள்ளன. அவையாவன

- வரிக்கே குலம்
- வில்லிப்ப குலம்
- காதிய குலம்
- வேங்கட குலம்

என்பனவாகும். இந்த நான்கு குலங்களுக்குமிடையே திருமணம், சடங்குகள், போக்கு வரத்துகள் நடைபெறுகின்றன. ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் என கருதுகின்றனர். ஆதலால் தாங்கள் குலத்தைத் தவிர பிற குலங்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்கின்றனர்.

**தேனுக் குறும்பர்கள்**

தேனுக் குறும்பர்கள் தமிழ்நாடு, கேரளா, கர்நாடக ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்றனர். தேனுக் குறும்பர்களிடம் குல அமைப்பு முறை காணப்படவில்லை. இருப்பினும் தாய் மாமன் மகள் தந்தையின் சகோதரியின் மகள் முதலியோரை திருமணம் செய்ய முக்கியத்துவம் அளிக்கின்றனர். தங்களின் பாரம்பரிய தொழிலான தேன் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர். காடு பாடு பொருட் சேகரிப்பு மற்றும் சிறிய அளவில் வேளாண்மையிலும் ஈடுபடுகின்றனர். இம்மக்கள் தங்களின் சடங்குகள் மற்றும் விழாக்களில் தாய்மாமனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

**பெட்டக் குறும்பர்**

பெட்டக் குறும்பர் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலும், கர்நாடகாவிலும் வாழ்ந்து வருகின்றனர். பெட்டக் குறும்பர்கள் மொழியில் பெட்டு என்பது மலை என்று பொருள் எனப்படுகிறது. இவர்கள் மலைப்பாங்கான பகுதியில் வாழ்வதால் பெட்டக் குறும்பர் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்கள் என்று முனைவர் ராபர்ட் சோசப் தம் நூலில் குறிப்பிடுகிறார்.



**பெட்டக் குறும்பர் குடியிருப்பு- மசினக்குடி**

**குலம்**

பெட்டக் குறும்பர்கள்சுமார் 28 குலங்களாக பிரிந்து வாழ்கின்றனர். இக்குலங்களுள் திருமண உறவு வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் குறிப்பிட்ட சில குலத்துக்காரர்களை பங்காளிகளாகக் கருதுகின்றனர். பெட்டக் குறும்பர்கள் குலப் பிரிவுகளாவன, 1. ஒற்புன்மகி, 2. புர்காளன்மகி, 3. ஜிர்கால்மகி, 4.பாடுகன்மகி, 5. மங்காளன்மகி, 6. அட்டங்கால்மகி, 7.பாம்பாரன்மகி, 8. பெலெஜின்மகி, 9. ராகோடுமகி, 10. கல்கின்மகி, 11. கோடிகின்மகி, 12.யான்பார்மகி, 13. யார்கால்மகி, 14. ஒல்மினிஜில்மகி, 15. தொகிடிள்மகி, 16. கெம்சில்மகி, 17. நிம்புல்மகி, 18. செளுட்மகி, 19. நடுடத்மகி, 20. ஒற்கேட்மகி, 21. பெர்மகி, 22. கின்ஜர்மகி, 23. குப்பார்மகி, 24. கெர்கிர்மகி, 25. கல்கேர்மகி, 26. கும்பால்மகி, 27. கூகேர்மகி, 28. மாவோள்மகி.

**திருமணம்**

பெட்டக் குறும்பர்கள் தாயின் சகோதரியின் மகள் மற்றும் தந்தையின் சகோதரியின் மகள் ஆகியோரை திருமணம் செய்து கொள்கின்றனர். "திருமணத்தின் போது மட்டுமே தாலிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். அதாவது திருமணமான பெண்கள் எப்போதும் தாலி அணிந்து இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. பொதுவாக திருமணத்திற்கு பிறகு தாலியை கழற்றி வைத்து விடுவது வழக்கம்."(குறும்பர் உறவுமுறை, ப.113).



**பெட்டக் குறும்பர் – மசினக்குடி- ராஜம்மா**

திருமணமான நாளன்று மணப்பெண்ணுக்கு மணமகனின் தாய்மாமனின் மனைவியை தாலி கட்டுகிறார். இம்மக்கள் பெரும்பாலும் தாய்மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்வதால், மணப்பெண்ணுக்கு அவளுடைய தாயே தாலி கட்டுகிறார். மறு மணம் மற்றும் விதவைத் திருமணமும் பெட்டக் குறும்பர்களிடையேக் காணப்படுகிறது.

**பாலுக் குறும்பர்கள்**

பாலுக் குறும்பர்கள் நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரி பகுதியில் வாழ்கின்றனர். பாலுக் குறும்பர்கள் ஆலுக் குறும்பர்கள் என்று அழைக்கப் படுகின்றனர். இவர்கள் கன்னடத்தின் கிளை மொழியை பேசுகின்றனர். இம்மக்கள் இரண்டு குலங்களாக பிரிந்து வாழ்கின்றனர். அவையாவன,

- ராகரெ
- வெள்ளக்கா

இச்சமூகத்தினர் ஒரே குலத்திற்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களைச் சகோதரர்களாகக் கருதுகின்றனர். இம்மக்கள் அனைத்து சடங்குகளிலும் தாய்மாமனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

**முடிவுரை**

தமிழகத்தில் வாழும் குறும்பர் பழங்குடியின மக்கள் குறித்த இந்த ஆய்வு பின்வரும் உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது:

1. பன்மைத்துவம்: குறும்பர்கள் என்ற பொதுப் பெயரில் அழைக்கப் பட்டாலும், அவர்களுக்குள் நிலவும் உட்பிரிவுகள் (முள்ளு, பெட்ட, தேன், பாலு) ஒவ்வொன்றும் தனித்தனி மொழியியல் மற்றும் கலாச்சாரப் பண்புகளைக் கொண்டுள்ளன.
2. இலக்கியத் தொடர்பு: சங்க இலக்கியங்கள் முதல் காப்பியங்கள் வரை குறும்பர்களின் வீரம் மற்றும் குறுநில ஆட்சிமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களின் தொன்மையை உறுதிப்படுத்துகிறது.
3. சமூகக் கட்டமைப்பு: ஒவ்வொரு உட்பிரிவிலும் 'குலம்' (Exogamous Clans) என்ற அமைப்பு மிக வலுவாக உள்ளது. இரத்த உறவு முறைகளைப் பேணுவதிலும், திருமண உறவுகளைத் தீர்மானிப்பதிலும் இக்குலப் பிரிவுகள் இன்றும் முக்கியப்பங்கு வகிக்கின்றன.
4. தாய்வழிச் உரிமை: திருமணச் சடங்குகளிலும் பிற நிகழ்வுகளிலும் 'தாய் மாமன்' முறைக்கு இவர்கள் அளிக்கும் முக்கியத்துவம், இவர்களின் சமூகப் பிணைப்பை வெளிப்படுத்துகிறது.

நவீன மாற்றங்களுக்கு இடையிலும் தங்களின் குல மரபுகளை மாறாமல் பின்பற்றிவரும் குறும்பர் இன மக்களின் வாழ்வியல், மானிடவியல் ஆய்வுகளுக்கு ஒரு சிறந்த களமாகும். இவர்களின் தனித்துவமான மொழிகளையும் கலாச்சாரத்தையும் பேணிக்காப்பது சமூகத்தின் கடமையாகும்.

**துணைநூல் பட்டியல்**


1. சாமிநாதையர், உ.வே., பெரும்பாணாற்றுப்படை, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1889
2. சிங்காரவேலுமுதலியார், ஆ. அபிதான சிந்தாமணி தமிழ்க் கலைக் களஞ்சியம், குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ், 1910
3. பக்தவத்சல பாரதி . தமிழகத் தொல்குடிகள், அடையாளம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 2003.
4. மகேஸ்வரன், முனைவர் சி. நீலகிரி குறும்பர் பழங்குடி ஓவிய மரபு, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீட்டுத் துறை, தஞ்சாவூர், 2004
5. வேங்கடசாமி நாட்டார், ந.மு., மற்றும் வேங்கடாச்சலம் பிள்ளை, அகநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை,1923